## பொன் வித்யாஷ்ரம் குழுமப் பள்ளிகள்

**வகுப்பு – IV தமிழ்**

**பண்படுத்தும் பழமொழிகள் (உரைநடை)**

**I. வினாவிடை :**

1. **அமுதவாணன் யாரிடம் ஆசி வாங்கினான்?**

   **பதில்:** அமுதவாணன் யானையிடம் ஆசி வாங்கினான்.

2. **'ஆ நெய்' 'பூ நெய்' ஆகியன எவற்றைக் குறிக்கின்றன?**

   **பதில்:** ஆ நெய் என்பது பசுவின் நெய்யினையும், பூ நெய் என்பது பூவில் ஊறும் தேனையும் குறிக்கின்றன.

3. **'ஆற்றில் போட்டாலும் அளந்து போடு' இப்பழமொழியின் பொருளைச் சொந்த நடையில் எழுதுக**

   **பதில்:** அகத்தில் போட்டாலும் அறிந்து போடணும் என்பது தான் சரியான வாக்கியம், எதையும் மனப்பாடம் செய்து நினைவில் கொள்ளக்கூடாது. கற்கும் போதே தெளிவாகப் புரிந்து கொண்டு கற்க வேண்டும்.

**முயல் அரசன் (துணைப்பாடம்)**

**II. வினாவிடை :**

1. **முயலின் கவலைக்குக் காரணம் என்ன?**

   **பதில்:** தன் மூதாதையரைத் தன் பசிக்கு இரையாக்கிய புலி என்றாவது ஒருநாள் தன்னையும் தின்று விடுமோ என்பது தான் முயலின் கவலைக்குக் காரணம் ஆகும்.

2. **விலங்குகளின் கூட்டத்தில் என்ன தீர்மானம் எடுக்கப்பட்டதாக முயல் கூறியது?**

   **பதில்:** முயல் புலியிடம், நீ இந்தக் காட்டின் அரசனாக இனி மேலும் நீடிக்கக் கூடாது என்பதே எல்லா விலங்குகளும் ஒரே மனதாக எடுத்த தீர்மானம் நிறைவேற்றின" என்று கூறியது.

3. **முயல், தான் அரசன் என்பதை நிரூபிக்க புலியை என்ன செய்யக் கூறியது?**

   **பதில்:** முயல், தான் அரசன் என்பதை நிரூபிக்க புலியிடம் தன்னை முதுகில் ஏற்றிக் கொண்டு போகச் சொன்னது.

4. **புலியை மன்னித்து விட்டுவிட முயல் கூறிய கட்டுப்பாடு என்ன?**

   **பதில்:** புலியை மன்னித்து விட்டுவிட எண்ணிய முயல், "உன்னை மன்னித்து விட்டு விடுகிறேன்; நீ இந்தக் காட்டிலேயே இருக்கக் கூடாது; எங்காவது ஓடிப் போய்விடு" என்ற கட்டுப்பாட்டினை விதித்தது.

5. **விலங்குகள் உண்மையில் எதைக் கண்டு அஞ்சின?**
**பதில்:** விலங்குகள் உண்மையில் புலியைக் கண்டு அஞ்சின.

6. **இக்கதையின் நீதியாக நீ உணர்வது யாது?**
**பதில்:** தவறு செய்வது மனித இயல்பு. தவறே செய்யாத மனிதர்கள் இல்லை சிரிய தவறு செய்தவர்களைத் திருத்த முயற்சி செய்யலாம். ஆனால் பெரிய தவறு செய்தவர்களுக்கு தண்டனை கொடுத்தால் தான் தண்டனையே திருந்துவதற்கு வாய்ப்பாக அமையும் மனித சமுதாயம் காப்பற்றப்படும்.